

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.3.2026) தலைமைச் செயலகத்தில், தி இந்து குழுமத்தின் இயக்குநர் என். ராம், நக்கீரன் கோபால், புதிய தலைமுறை தலைமை ஆசிரியர் சமஸ், சென்னை பத்திகையாளர் மன்றத்தின் தலைவர் எம். சுரேஷ் வேதநாயகம், துணைத் தலைவர்கள் ஜெ. மதன், திருமதி கே. சுந்தரபாரதி, பொதுச் செயலாளர் எம். ஹரீஃப், பொருளாளர் எஸ். மணிகண்டன், குழு உறுப்பினர்கள் பி.ஸ்டாலின், எஸ். பழனிவேல், எம். விஜயகோபால், எஸ். கார்த்திகேயன், எஸ்.சண்முகப்பிரியன், ஆகியோர் சந்தித்து, பத்திரிகையாளர்களின் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் உயர்வு, அங்கீகார அடையாள அட்டை வைத்திருக்கும் அனைத்து பத்திரிகையாளர்களுக்கும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின்கீழ் மருத்துவ காப்பீடு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் செங்கல்பட்டு மாவட்டத்தில் வீட்டுமனைகள் வழங்க நடவடிக்கை போன்ற பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றியதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.3.2026) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு தலைமை காஜி முஃப்தி உஸ்மான் முஹயித்தீன் பாகவி அவர்கள் அண்மையில் மெக்காவிற்கு புனித உம்ரா பயணம் மேற்கொண்டதையொட்டி சந்தித்தார். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், காஜா மொஹிதீன், காசிம் அனீஸ்ஜாவித், அப்துல் வஹாப், ரசூல் மைதீன் ஆகியோர் உள்ளனர்.

### அரசு கலைக்கல்லூரிகளுக்கு தேர்வு செய்யப்பட்ட

# 5 உதவிப் பேராசிரியர்களுக்கு பணி நியமன ஆணை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, மார்ச் 15-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.03.2026 அன்று தலைமைச் செயலகத்தில், 2025-26 ஆம் கல்வி யாண்டில் அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் காலியாகவுள்ள உதவிப் பேராசிரியர் பணியிடங்களில் முதற்கட்ட மாக வரலாறு கல்வியியல், மனித உரிமைகள், கடல் உயிரியியல் மற்றும் வனவிலங்கு உயிரியியல் ஆகிய 4 பாடப் பிரிவுகளுக்கு தெரிவு செய்யப்பட்ட 5 உதவிப் பேராசிரியர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.**

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப் படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதிவாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயில "புதுமைப் பெண்" திட்டம் மற்றும் மாணவர்கள் உயர் கல்வி பயில "தமிழ்ப்புதல்வன்" ஆகிய திட்டங் களின் கீழ் மாதம் ரூ.1000/ உதவித் தொகை வழங்குதல், அரசு பள்ளி மாணாக்கர்களுக்கு இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கையில் 7.5 விழுக்காடு முன்னுரிமை யின் அடிப்படையில் இடஒதுக்கீடு, முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் தமிழ்நாடு உயர்கல்வி மாணவர்கள் சேர்க்கையில் 47 சதவீதத்துடன் முதலிடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில், அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் காலியாகவுள்ள உதவிப் பேராசிரியர் பணியிடங்களில் 2708 பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக எழுத்து தேர்வு மற்றும் நேர்காணல் மூலம் நியமனம் செய்வதற்கு அரசால் அனுமதித்து ஆணை வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில், உதவிப் பேராசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்பிட ஆசிரியர் தேர்வு வாரியத்தால் 16.10.2025 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டது.

ஆசிரியர் தேர்வு வாரிய அறிவிக்கையின்படி, பணிநாடுநர்களால் இணையவழி வாயிலாக ஆசிரியர் தேர்வு வாரியத்தால் 61 பாடப் பிரிவுகளுக்கான 2708 பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, எழுத்துத் தேர்வு 27.12.2025 அன்று நடத்தப்பட்டு, முதற்கட்டமாக 4 பாடப் பிரிவுகளுக்கு மட்டும் தேர்வு முடிவு வெளியிடப்பட்டது. தேர்வில் வெற்றி பெற்றவர்களின் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்காணல் பணிகள் நிறைவு பெற்று, பணிநாடுநர்கள் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் நான்கு பாடப்பிரிவுகளில் 5 நபர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மீதமுள்ள பணியிடங்களுக்கு தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு, சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்காணல் நடத்தி, தெரிவு செய்யப்படும் நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் விரைவில் வழங்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உயர்கல்வித் துறை செயலார் முனைவர் பொ.சங்கர், கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.3.2026) முகாம் அலுவலகத்தில், கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் சந்தித்துப் பேசினார்.

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நாளை

# தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் "தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்" நாளை (16-03-2026 - திங்கட்கிழமை) காலை 10.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம் "கலைஞர் அரங்கில்" நடைபெறும்.**

**அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.**

**பொருள் : 2026 சட்டப்பேரவைத் தேர்தல்**



**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18,
நாள் : 13.3.2026

### முதுகில் குத்துவதுதான் எடப்பாடியின் அரசியல் அடையாளம்!

# மதபிரிவினைவாதம் - வன்முறையைத்தூண்ட துணை நிற்கிறார் எடப்பாடி!

## நெல்லைக் கூட்டத்தில் ஓ.பி.எஸ். கடும் தாக்கு!

*நெல்லை, மார்ச் 15-*

தி.மு.க.வில் சமீபத்தில் இணைந்த முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம், தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கினார். அதன்படி, தென்காசி மாவட்டம், தென்காசி, கடையநல்லூர், சங்கரன்கோவில் தொகுதிகளில் தேர்தல் சுற்றுப்பயணம் செய்தார்.

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் குற்றாலத்தில் தேர்தல் பிரச்சார ஆலோசனைக் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பேசியதாவது:



**துரோகத்தின் எல்லை பழனிச்சாமி!**

யார் வேண்டுமானாலும் கட்சி ஆரம்பிக்கலாம். கட்சியை அபகரித்துக் கொண்டு நாடகம் ஆடலாம். கடந்த முறை ஆட்சியில் இருந்தவர் கள் இன்று எதிர்க்கட்சியாக இருந்து தவறான பிரச்சாரத்தை மக்களிடம் பரப்பி வருகிறார்கள். ஊர்ந்து போய் பதவியைப்பெற்று, காலைத் தொட்டதால் பதவி தந்தவருக்கே நன்றி இல்லாமல் துரோகம் செய்தவர். நன்றி இல்லாத ஒருவர் அரசியலில் இருக்கிறார் என்றால் அது அவ ராகத்தான் (எடப்பாடி) இருக்கும். அவர் பொதுச்செயலாளராக வந்ததிலிருந்து நாடாளுமன்றத் தேர்தல், இடைத் தேர்தல் சட்ட மன்றத் தேர்தல், ஊரக உள்ளாட்சி தேர்தல் என தொடர்ந்து 10 தேர்தல்களில் தொடர் தோல்வி கிடைத்தது. அவரை நம்பி யாரும் வாக்களிக்க தயாராக இல்லை. இதனால் தான் அவர் தோல்வியை தழுவினார்.

**அவர் சொல்வதெல்லாம் பொய்!**

மக்கள் தெளிவாக உள்ளனர். எந்த சூழ்நிலையிலும் நன்றி மறந்தவர்களுக்கு மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்பதுதான் உண்மை. வருகின்ற தேர்தலிலும் அதுதான் நடக்கும். அனைவருக்கும் பொதுவாக இருந்த அ.தி.மு.க.வை ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவருக்கான கட்சியாக மாற்றி விட்டார். எத்தனையோ இடங்களில் அ.தி.மு.க. விற்கு உறுதுணையாக நின்ற சமூகத்தை முற்றாக புறக்கணித்து விட்டார்.

அத்துடன் சிறுபான்மை மக்களுக்கும் எதிராக செயல்பட்டு சமூக நீதி தத்துவத்தை குழிதோண்டி புதைத்தவர் எடப்பாடி. தென் தமிழக மக்கள் உண்மையான விசுவாசியாக காலம் காலமாக இருந்து வந்தவர்களுக்கு எடப்பாடி செய்தது துரோகம். தன்னை அடையாளம் காட்டியவர்களின் முதுகில் குத்துவது தான் அவரது அரசியல் அடையாளம்.

தென் மாவட்டத்தில் ஒரு சமுதாய மக்கள் எந்த நிலையிலும் வரக்கூடாது என்று நினைக்கின்ற நபர் அவர். தமிழ்நாடு அண்ணா, பெரியார் போன்ற தலைவர்களால் பண்படுத்தப் பட்ட மண். பெரியாரையும் அண்ணாவையும் அவமதிக்கும் கூட்டங்களில் அவர் கலந்து கொள்கிறார். தமிழ்நாட்டில் மத பிரிவினைவாதம் வன்முறையை தூண்டுவதற்கு துணை நிற்கிறார் எடப்பாடி பழனிசாமி.

ஜெயலலிதாவின் ஆன்மா அவரை மன்னிக்காது. தமிழ்நாட்டின் சமநீதியை என்ன விலை கொடுத்தாவது காப்பாற்றி ஆக வேண்டும். ஆகவேதான் சமூக நீதியை காக்கும் தாய்க்கழகமான தி.மு.க.வில் நான் இணைந்து இருக்கிறேன்.

இவ்வாறு ஓ.பி.எஸ். பேசினார்.

### கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் இன்று

# புனித ரமலான் நோன்பு திறப்பு நிகழ்ச்சி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று சிறப்பிக்கிறார்!

சென்னை, மார்ச் 15-

தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு பேரன்பின் ஈகை பெருவிழா - புனித ரமலான் நோன்பு திறப்பு நிகழ்ச்சி இன்று (15.3.2026 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.22 மணிக்கு லிங்க்ஸ் கன்வென்ஷன் சென்டர், பச்சையப்பன் கல்லூரி எதிரில், அமைந்தகரையில் நடைபெறுகின்றது.

இந்நிகழ்ச்சியில் கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

இதில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் கே.எம்.காதர் முகைதீன், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாநில சிறுபான்மை யினர் ஆணைய தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ், தமிழ் மாநில தேசிய லீக் பொதுச் செயலாளர் திருப்பூர் அல்தாப், இந்திய தேசிய லீக் தலைவர் பஷீர் அகமது, மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் தமிமுன் அன்சாரி, எஸ்.டி.பி.ஐ. தலைவர் நெல்லை முபாரக், தமிழ்நாடு வக்பு வாரிய தலைவர் கே.நவாஸ்கனி எம்.பி., விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் ஆளூர் ஷா நவாஸ், தமிழ்நாடு அரசு முதன்மை காஜி உஸ்மான் மொய்தீன், தமிழ்நாடு அரசு தலைமை காஜி (ஷியா) மௌலானா குலாம் முஹம்மது மொஹ்திகான், அமைச்சர் சா.மு.நாசர், ரேலா மருத்துவமனை இயக்குநர் டாக்டர் முஹம்மது ரேலா, அமைச்சர்கள் மா.சுப்பிரமணி யன், பி.கே.சேகர்பாபு, தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணைய தலைவர் ஜோ.அருண், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் பொருளாதார மேம்பாட்டுக் கழக தலைவர் துறைமுகம் காஜா, மேனாள் நீதியரசர் அக்பர் அலி,

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் நே.சிற்றரசு, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி எம்.பி., சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், அண்ணாநகர் கிழக்குப் பகுதிச் செயலாளர் பரமசிவம், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் எம்.பி., தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், 104வது வட்ட தி.மு.க. செயலாளர் வழக்கறிஞர் பாபு,

மேலும் பா.மு.முபாரக், தி.அ.முஹமது சகி, அன்வர் ராஜா, எம்.எம்.அப்துல்லா, இறையன்பன் குத்தூஸ், அப்துல் மாலிக், எஸ்.ஏ.எஸ். ஹபிசுல்லா, முகம்மது இஸ்ரத், டாக்டர் ஜனாப் சபி, ஜனாப் சித்திக், எச்.எம்.எச். நாஜிம், கே.எஸ்.மஸ்தான், அப்துல் வஹாப், கவிஞர் ஜனாபா சல்மா எம்.பி., அலி ஷேக் மீரான், முகமது பைசல், ராஜா முகம்மது, அப்துல் காதர், வாசிம் ராஜா, ஜாகிர் உசேன், வி.ஜோசப்ராஜ், சி.ஜெரால்டு, அன்வர்கான், அடையார் ஜனாப் சபீல், டாக்டர் சேக் அப்துல்லா, எம். நூருல்லா, முனவர் ஜான், விஜயகுமார், கா.ரபி அகமது, துபாய் அன்வர் அலி, ஷாகுல் ஹமீது, எஸ்.டி.ஆர்.பொன்சீலன், இராபர்ட் இராஜதுரை, இராஜேஷ் ஜெயின், ஷேக் இஸ்மாயில் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.



திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, கலைஞர் அறிவாலயத்தில் சமையல் எரிவாயு தட்டுப்பாட்டைக் கண்டித்து தி.மு.க. சார்பில் இன்று நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டம் குறித்து மத்திய மற்றும் வடக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் அதன் தோழமைக் கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றினார். இந்தக் கூட்டத்தில், தமிழகத்தைப் புறக்கணிக்கும் ஒன்றிய அரசு மற்றும் சமையல் எரிவாயு தட்டுப்பாட்டைக் கண்டித்து முக்கிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்டச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ., துறையூர் சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார், மாவட்ட மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி நிர்வாகி தேவராஜ் உள்ளிட்ட அனைத்து தோழமைக் கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.